மாலை மலர் epaper

Mallai malarePaper

Copyright © 2009 Mallaimalar.










சூரியனுக்கு கறுப்பு பொட்டு வைத்ததுபோல் வெள்ளி கிரகம் கடக்கும் காட்சிகள்.

## விண்ணில் இந்த நூற்றாண்டின் 2–வது அதிசயம்

# கறுப்பு புள்ளி போல் சூரியனை கடந்த வெள்ளி

## சென்னையில் தெளிவாக தெரிந்தது

சென்னை, ஜூன். 6-
சூரியனை வெள்ளி கிரகம் கடந்த காட்சி கறுப்பு புள்ளி போல் சென்னையில் தெரிந்தது.

### விண்வெளி அதிசயம்

விண்வெளியில் சூரிய குடும்பத்தில் உள்ள கோள்கள் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றன. பூமியானது சூரியனை சுற்றி வர 365 நாட் கள்



எடுத்துக்கொள்கிறது. இது வழக்கமாக நடைபெறும்.

ஆனால் வெள்ளி கிரகம் சூரியனை சுற்றி வரும்போது அது எடுத்துக்கொள்ளும் நேரம் ஒரே சீராக இருக்காது. இதனால் வெள்ளி கிரகம் சூரியனை கடக்கும் நேரம் மாறும். இதற்கு முன் 243 ஆண்டுகளில் 4 முறை சூரி யனை வெள்ளி கடந்தது.

அதன் பிறகு இந்த நூற்றாண்டில் 8 ஆண்டு களுக்கு முன் 2004 ஜூன் 8-ந்தேதி சூரியனை வெள்ளி கடந்து சென்றது. 8 ஆண்டு இடைவெளியில் இப்போது மீண்டும் சூரியனை வெள்ளி கடக்கும் அபூர்வ நிகழ்ச்சி நடந்தது. சூரியனுக்கும், பூமிக்கும் நேர் குறுக்கே வெள்ளி கிரகம் கடந்து செல்வதால் இந்த காட்சியை பூமியில் இருந்து பார்க்க முடிகிறது.

இனி அடுத்த சூரிய கடப்பு நிகழ்வு 2117-ம் ஆண்டில் தான் நடைபெறும். எனவே இந்த நூற்றாண்டில் வசிப்பவர்கள் இன்று காண்பதுதான் கடைசி நிகழ்ச்சி என்பதால் இந்த அபூர்வ காட்சியை பார்க்க மாணவர்கள்-பொதுமக்களிடையே ஆர்வம் ஏற்பட்டது.

### சிறப்பு ஏற்பாடு

இந்த காட்சியை வெறும் கண்ணால் பார்க்கக்கூடாது என்பதால் சென்னையில் இந்த அதிசய நிகழ்வை காண மெரீனா கடற்கரையிலும், கோட்டூர்புரம் பிர்லா கோளரங்கத்திலும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. அதிகாலை 5.50 மணி முதல் 10.22 மணி வரை மட்டுமே இது தெரியும் என்று அறிவிக்கப்பட்டதால் மாணவ-மாணவிகள் பெற்றோருடன் அதிகாலை யிலேயே மெரீனா கடற் கரைக்கும், பிர்லா கோளரங் கத்துக்கும் வந்திருந்தனர்.

அங்கிருந்த டெலஸ்கோப் மூலம் அபூர்வ நிகழ்வை கண்டு



சூரியனை வெள்ளி கடக்கும் காட்சியை சென்னை மெரீனா கடற்கரையில் கறுப்பு கண்ணாடி மூலம் பார்த்து ரசிக்கும் மாணவிகள்.



பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரையில் விண்வெளி அதிசயத்தை டெலஸ்கோப்பில் பார்க்க கியூவில் ஆர்வத்துடன் நின்ற பொதுமக்கள்.



தாம்பரத்தில் டெலஸ்கோப்பில் சூரியனை வெள்ளி கடக்கும் நிகழ்ச்சியை பார்க்கும் மாணவ– மாணவிகள்.

வற்றின் மூலம் பார்த்து

மூலம் இந்த அபூர்வ

பல்வேறு மாநிலங்களிலும்

களித்தனர். சில நிமிடங்கள் வரை உற்றுப்பார்த்த பின்பு தான் கறுப்பு புள்ளிபோல் வெள்ளி கிரகம் சூரியனை கடக்கும் காட்சி தெரிந்தது. இதைப்பார்த்து மாணவ- மாணவிகள் பரவசம் அடைந்தனர். இதேபோல் பெசன்ட் நகர் எலியர்ட்ஸ் கடற்கரையில் டெலஸ்கோப்புகள் வைக்கப்பட்டிருந்தது. பொதுமக்கள் நீண்ட கியூவில் நின்று ஒவ்வொருவராக பார்த்து சென்றனர்.

மற்ற இடங்களில் பொது மக்கள் முகம் பார்க்கும் கண்ணாடி, நுண் துளையிட்ட கேமரா, பைனாகுலர் ஆகிய

ரசித் தனர்.

சென்னையில் இந்த அபூர்வ நிகழ்வை பார்த்து ரசித்த மக்கள் கூறுகையில், சூரியனுக்கு கறுப்பு பொட்டு வைத்ததுபோல் இருந்தது என்று மகிழ்ச்சி தெரிவித்த னர்.

### கன்னியாகுமரி

கன்னியாகுமரி கடற்கரை யில் அந்த அபூர்வ நிகழ்ச் சியை ஏராளமான மக்களும் சுற்றுலா பயணிகளும் கண்டு ரசித்தனர். சேலத்தில் போஸ் மைதானத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் டெலஸ்கோப்

நிகழ்வை மக்கள் காண ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இங்கு ஏராளமா னோர் வந்து பார்த்துச் சென்றனர்.

மதுரை உள்ளிட்ட தமிழ் நாட்டின் பிற இடங்களிலும் சூரியனை வெள்ளி கடந்து செல்லும் நிகழ்ச்சி தெரிந் தது.

### டெல்லி

டெல்லியில் சூரியனை வெள்ளி கடக்கும் நிகழ்ச்சி தெளிவாக தெரிந்தது. பிரகாசமான சூரியனில் வெள்ளி கிரகமானது கறுப்பு புள்ளிபோல் பெரிய அளவில் தெரிந்தது. ஏராள மானோர் இதை பார்த்து ரசித்தனர். நாடு முழுவதும்

இதை காண முடிந்தது.

அமெரிக்கா முதல் தென் கொரியா வரை உள்ள இடைப்பட்ட நாடுகளில் இந்த அதிசய நிகழ்ச்சி தெளிவாக தெரிந்தது. தென் அமெரிக்காவின் ஹோனலூலு நகரில் உள்ள விண்வெளி ஆய்வு மையம் இந்த அபூர்வ நிகழ்ச்சியை ஆய்வுக்காக படம் பிடித்துள் ளது.

ஆங்காங் விண்வெளி அருங்காட்சியகத்தில் உள்ளூர் விஞ்ஞானிகள் இந்த அபூர்வ நிகழ்வை பொதுமக்களுக்கு விளக்கி கூறினார்கள்.

"